# காலச்சுவடு பதிப்பகம் | 2024 புத்தகக் காட்சி வெளியீடுகள்

## உ | ல | க | கி | ளா | சி | க் | நா | வ | ல்




### ஒரு பெண்மணியின் கதை

**அன்னி எர்னோ**

தமிழில்: **எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி**

ரூ. 110

அன்னி எர்னோ 2022 ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். இந்நூலில் அவர் 1986 ஆம் ஆண்டு மரணமடைந்த தன் தாயை முன்னிறுத்துகிறார். விவசாயம், ஆலைத் தொழில், வியாபாரம் எனப் பல்வேறு தளங்களில் துடிப்புடனும், சமூக விழிப்புணர்வுடனும் செயல்பட்ட அப்பெண்மணி வயதான காலத்தில் துரதிர்ஷ்டவசமாக 'அல்சைமர்' வியாதியால் பாதிக்கப்பட்டு, தன் நினைவுகளையும், கடந்துவந்த பாதையையும் மறந்துவிடுகிறாள். தன் வாழ்க்கையில் தடம் பதித்த தன் தாயை மறைவிலிருந்தும் மறதியிலிருந்தும் மீட்டெடுக்க விழைகிறார் அன்னி எர்னோ. அவளது ஆளுமையை வெளிப்படுத்தும் அதேவேளையில் தனக்கும் அவளுக்குமிடையே இருந்த பாசப் போராட்டத்தையும், பிணக்குகளையும் எடுத்துரைக்கிறார். தனிப்பட்ட ஒரு குடும்பத்தைக் காட்சிப்படுத்தும் இந்நூல் சமூகவியல் பார்வையில் படைக்கப்பட்டிருப்பது சிறப்பாகும்.

## மொ | ழி | பெ | ய | ர் | ப் | பு | நா | வ | ல்




### மணல் சமாதி

**கீதாஞ்சலி ஸ்ரீ**

தமிழில்: **அனுராதா க்ருஷ்ணஸ்வாமி**

ரூ. 750

கீதாஞ்சலி ஸ்ரீ எழுதிய இந்தி நாவலான 'ரேத் சமாதி'யின் கதை சொல்லும் பாணி மிகப் புதியது. இந்த நாவலின் கரு, காலகட்டம், ஒழுங்கமைதி, செய்தி அனைத்தும் தமக்கே உரித்தான தனித்துவம் நிறைந்த பாணியில் செல்கின்றன. நமக்குப் பழக்கமான எல்லைகளையும், எல்லைகளுக்கு அப்பாலும், அனைத்தையும் நிராகரித்தும் தாண்டியும் செல்கின்றன. கூட்டுக் குடும்பம் தனிக் குடித்தனம், ஆண்-பெண், இளமை-முதுமை, உறக்கம்-விழிப்பு, அன்பு-வெறுப்பு, இந்தியா-பாகிஸ்தான் எனப் பல்வேறு எல்லைகளினூடே நாவல் பயணிக்கிறது.

ஆங்கில மொழியாக்க நூல்களுக்கான புக்கர் விருது (2022) பெற்ற ரேத் சமாதி (ஆங்கிலத்தில் Tomb of Sand) என்னும் இந்தி நாவலின் நேரடி மொழியாக்கம் இது. சமகால இந்தியின் வாசனைகளையும் பன்முகக் குரல்களையும் சேதமில்லாமல் தமிழுக்குக் கொண்டுவந்திருக்கிறார் அனுராதா.




### என்னை மாற்று

(ஸ்லோவேனிய நாவல்)

**ஆந்த்ரே ப்லாட்னிக்**

தமிழில்: **எத்திராஜ் அகிலன்**

ரூ. 390

ஸிந்தஸிஸ் எனும் செயற்கைப் பொருள் உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களை உண்டு வாழும் மக்கள் பல்வேறான உடல் உபாதைகளை அனுபவிக்கிறார்கள். இந்தப் பொருட்களைக் கவர்ச்சியான மொழியில் மக்களிடம் கொண்டுசெல்லும் விளம்பர நிறுவனத்தில் கதையின் நாயகன் போருட் முக்கியப் பொறுப்பாற்றுகிறான். விளம்பரத்திற்காகத் தான் உருவாக்கிய வசீகர வாக்கியங்கள் மக்களுக்கு எவ்விதமான கேட்டை விளைவித்திருக்கிறது என்பதைக் காலம் கடந்து உணரும் போருட் தான் விளைவித்த கேட்டுக்குப் பரிகாரம் தேட முயலுகிறான். அவன் வெற்றியடைகிறானா, மாற்றங்கள் ஏற்படுகின்றனவா என்பதையே இந்த நாவல் விவரிக்கிறது.

## நா | வ | ல்




### தொலைந்து போனவர்கள்

**சா. கந்தசாமி**

ரூ. 200

பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்து முடித்துக் குடும்பம், வேலையென்று லௌகீக வாழ்வின் நெருக்கடிகளில் சுழலும் நான்கு நண்பர்களின் கதைதான் 'தொலைந்து போனவர்கள்'. இறுக்கிக் கட்டப்பட்ட முடிச்சைச் சிறுகச் சிறுக அவிழ்ப்பதுபோல இந்நாவலின் கதாபாத்திரங்கள் தங்களது நினைவுகளைக் கூறுகிறார்கள். சா. கந்தசாமி இந்த நாவலில் வாழ்க்கைப் பாதையைத் தேர்வு செய்ய இயலாதவர்களையும் தோல்வியுற்றவர்களையும் வாழ்வின் துயரங்களை எதிர்த்து நின்று மீட்டுக்கொள்ளப் போராடுபவர்களையும் கதாபாத்திரங்களாக்கியிருக்கிறார். பால்யகால நண்பர்கள் நீண்ட காலத்திற்குப் பிறகு சந்தித்துக்கொண்டு தங்களை மீட்டுக்கொள்ளும் தருணம் வெற்றுச் சம்பவங்களாகச் சித்தரிக்காமல் கலாபூர்வமான படைப்பாக மாற்றுகிறார் சா. கந்தசாமி. சா. கந்தசாமியின் மிகச் சிறந்த நாவல்களில் ஒன்றான இந்த நாவல், அரை நூற்றாண்டுக்குப் பிறகும் சிறந்த வாசிப்பனுபவத்தைத் தரும் படைப்பாக மிளிர்கிறது.





### தருக்

**கார்த்திக் பாலசுப்ரமணியன்**

ரூ. 350

ஆஸ்திரேலியாவைக் களமாகக் கொண்டு இடப்பெயர்வு குடியேற்ற அரசியலைப் பேசுகிறது இந்த நாவல். 300 ஆண்டுகளுக்கு முன்பு புதிய இடம்தேடி ஆஸ்திரேலியா விற்குச் சென்ற இங்கிலாந்துக் குடிமக்களையும் இன்று வாழ்வாதாரம் தேடி ஆஸ்திரேலியா செல்லும் ஆசிய நாடுகளின் குடிமக்களையும் இணைகோடுகளாகச் சித்திரிக்கிறது நாவலின் கதை. இடப்பெயர்வு ஏற்படுத்தும் சலனங்களினூடே மாறிவரும் மனித உறவுகளையும் உணர்வுகளையும் நுண்ணுணர்வுடன் சித்திரிக்கிறது. நேரடியான காட்சிகளையும் குறியீடுகளையும் கொண்ட கதையாடல் பல்வேறு நுட்பங்களையும் அடுக்குகளையும் கொண்டு சிறந்த வாசிப்பனுபவத்தைத் தருகிறது. 'நட்சத்திரவாசிகள்' என்னும் தனது முதல் நாவலுக்காக 'யுவ புரஸ்கார்' விருது பெற்ற கார்த்திக் பாலசுப்ரமணியனின் இரண்டாவது நாவல் இது.





## கருப்புக் கோட்டு

**வண்ணநிலவன்**

ரூ. 230

இளவயதில் ஒரு வழக்கறிஞரிடம் வக்கீல் குமாஸ்தாவாக மூன்றாண்டுகள் பணிபுரிந்த வண்ணநிலவன், நீதிமன்ற வளாகத்து அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதிய நாவல் ‘கருப்புக் கோட்டு’. நீதித் துறையுடன் நெருங்கி தொடர்புகொண்டிருந்த அந்த நாட்களில் பல்வேறு விதமான மனிதர்கள், வழக்குகள், கட்சிக்காரர்கள் எனப் பல வித அனுபவங்களுக்கு ஆளாகிய வண்ணநிலவன் அந்த அனுபவங்களை நாவலாக்கியிருக்கிறார். நீதிமன்ற வளாகத்தில் தனக்குக் கிடைத்த கதைகளையெல்லாம் எழுத வேண்டுமென்றால் அதற்கு ஒரு ஆயுள் போதாது என்று கூறும் வண்ணநிலவன், அந்தக் கதைகளின் அடிநாதத்தை ஆதார சுருதியாகக் கொண்டு படைத்திருக்கும் இந்த நாவல் பல்வேறு மனிதர்களையும் அவர்கள் கதைகளையும் குறித்த புரிதலை ஏற்படுத்தக்கூடியது.




## அகதியின் பேர்ளின் வாசல்

**ஆசி கந்தராஜா**

ரூ. 200

இரண்டாம் உலகப் போரின்போது பிரி வினைக்குள்ளான ஜெர்மனியின் கிழக்கு பேர்ளினில் இறங்கி மேற்கு பேர்ளின் வழியாகப் பல்வேறு தேசங்களுக்கும் புலம்பெயர்ந்த அகதிகளின் வாழ்வு குறித்த பிரதி இது. ஐரோப்பியப் பெருநகரமொன்றிலிருந்து ஆரம்பிக்கும் நாவல் இலங்கை இனக்கலவரம், போர் ஆகியவற்றின் இணைகோடாகப் பயணித்து நீண்ட அகதி வாழ்வையும் அதன் மூல காரணங்களையும் விவாதிக்கிறது. அக, புறச் சிடுக்குகளுக்குள்ளால் அகதிகளின் அந்தர வாழ்வைக் கவனப்படுத்துகிறது. பிளவுபட்ட ஜெர்மனியின் சிக்கலான நில அமைப்பையும் ‘போட்ஸ்டம்’ உடன்படிக்கையின் விளைவுகளையும் குறித்து வரலாற்றுத் தகவல்கள், கதாபாத்திரங்களின் உரையாடல்கள், வர்ணனைகள் மூலம் அகதிகளின் துயரமான வாழ்வைப் பேசுகிறது. அவர்களின் வருகையையொட்டி ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, ஊதியக் குறைப்பு, வேலைவாய்ப்பின்மைகள் ஆகியவற்றைப் புனைவில் மீட்டெடுத்து ஒரு காலத்தை வாசகர்முன் திறந்துவைக்கிறது.




## வேர்ப்பற்று

**இந்திரா பார்த்தசாரதி**

ரூ. 340

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு ஓராண்டு முன்னால் தொடங்கி, சுதந்திரம் பெற்ற ஐந்தாண்டுகளில் முடியும் கதை இது. ஒரு இளைஞனின் கனவு கலைவதைச் சொல்லும் கதை. குறிப்பிட்ட காலகட்டத்தின் சமுதாயத்தைப் பற்றியும் அதன் மதிப்பீடுகளையும் பற்றியுமான கதை. சுதந்திர இந்தியாவின் பல்வேறு கூறுகளையும் தழுவியபடி விரியும் இந்த நாவல் வாழ்க்கை விழுமியங்கள், மகோன்னதமான கனவுகள் ஆகியவை பற்றிய அடிப்படையான கேள்விகளை எழுப்புகிறது.




## கய்த பூவு

**மலர்வதி**

ரூ. 380

மலர்வதியின் கய்த பூவு, பெண்மீது நிகழ்த்தப்படும் பாலியல் கொடுமையை விவாதிக்கும் நாவல். பல்வேறு குடும்பங்களின் கிளைக்கதைகளுடன் பலதரப்பட்ட பெண்களின் கதைகளாக விரிகிறது இந்த நாவல். குமரி வட்டாரத்தில் புழங்கும் சொற்கள் இந்நாவலுக்கு அழகிய வண்ணத்தைச் சேர்க்கிறது. சின்னஞ்சிறு வயதில் நடக்கும் விளையாட்டுத் திருமணத்தில் தொடங்குகிறது இந்த நாவல். சுதனும் ரோசாவும் பால்ய காலத்திலிருந்து நட்புடன் வளர்ந்துவருகிறார்கள். பருவ வயதைக் கடக்கும்போது சுதன் சுதந்திரமான காதலை, கட்டுப்பாடுகளற்ற பாலுறவை, நிர்பந்தமற்ற உறவுகளை விரும்பி வாழும் இன்றைய நவீன ஆணாக மாறி வளர்கிறான். ரோசா அவனை மட்டும் விரும்பும் பெண்ணாக வளர்ந்திருக்கிறாள். இவ்விருவரின் வாழ்வை எதிரும் புதிருமாக வைத்தபடி நகர்கிறது நாவல். பெண்ணின் திருமணத்தை, அதன் அரசியலை, சமூக மதிப்பீடுகளை விரிவாகப் பேசும் மலர்வதி, ரோசா எனும் கதாபாத்திரம் மூலமாகக் குமரி நிலத்துப் பெண்களின் அன்றாட வாழ்க்கைப் பாடுகளை அறியச்செய்கிறார். இது மலர்வதியின் ஐந்தாவது நாவல்.

### கு | று | நா | வ | ல்




## அவனைக் கண்டீர்களா?

**பா.அ. ஜயகரன்**

ரூ. 270

பா.அ. ஜயகரனின் இரண்டாம் கதைத் தொகுதி இது. அரசுகளாலும் அமைப்புகளாலும் கைவிடப்பட்ட, துண்டாடப்பட்ட, தூக்கி எறியப்பட்ட மனிதர்களின் கதைகள் இவை. இந்தக் கதையின் மனிதர்களை ஆசிரியர் இரத்தமும் சதையுமாக ஆழமான இணக்கத்தோடு வரைந்து காட்டுகிறார். இலட்சியத்துக்காகப் பலிகடாவாக்கப்பட்ட சாட்சிகளை இக்கதைகளில் வாசிக்கலாம். அந்தச் சாட்சிகள் தரும் குற்றவுணர்வு அரசுகள், அமைப்புகள் மேலான விமர்சனமாக விரிவதை இத்தொகுப்பின் சாரமாகக் கொள்ளலாம். காட்சிகளையும் மனித மனங்களையும் துல்லியமான நறுக்குத் தெறித்தாற்போன்றான விவரணைகளோடு எழுதிக் காட்டும் ஆசிரியர் மனிதர்களின் இதத்தையும் இக்கதைகளில் துலக்கிக் காட்டுகிறார். புலம்பெயர்ந்த சூழலில் சமகாலக் கதைகளை எழுதிவரும் முக்கியமான படைப்பாளிகளில் ஒருவராக பா.அ. ஜயகரனை இத்தொகுதி அடையாளம் காட்டும்.

### மொ | ழி | பெ | ய | ர் | ப் | பு | சி | று | க | தை | க | ள்




## பால்மீசை

(கன்னடச் சிறுகதைகள்)

மொழிபெயர்ப்பு: **நஞ்சுண்டன்**

தொ-ர்: சிவப்பிரசாத்

ரூ. 380

கன்னடத்தில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கும் மேலாக எழுதிவரும் கவிஞரும் புனைகதை எழுத்தாளருமான ஜெயந்த் காய்கிணியின் ஏழு கதைகளுடன் விவேக் ஷான்பாக், எஸ். திவாகர் முதலான கன்னட எழுத்தாளர்களின் புகழ்பெற்ற கதைகளையும் அவற்றின் தன்மைகள் சற்றும் மாறாத முறையில் சிறப்புற மொழிபெயர்த்திருக்கிறார் நஞ்சுண்டன். தமிழ்ச் சிறுகதை உலகிற்குப் புதிய திறப்பாக அமையக்கூடிய தொகுப்பு இது.




## மாலை நேரத்து விடியல்

**பி. சத்யவதி**

தமிழில்: கௌரி கிருபானந்தன்

ரூ. 200

சத்யவதியின் கதைகள் தற்கால நவீன தெலுங்கு மண்ணின் கலாச்சார நிலப்பரப்பையும் அங்கு வாழும் பெண்களின் வாழ்க்கைச் சூழலையும் பேசுகிறது. நடுத்தர வர்க்கத்துப் பெண்களின் அன்றாடங்களையும் அவர்களது துயரத்தையும் மெல்லிய குரலில் நகைச்சுவை உணர்வுடன் இக்கதைகள் கையாள்கின்றன. அலுவலக வேலை முடிந்த பிறகு வீட்டு வேலைகளைச் செய்வதற்காக அவசரமாக வீடு திரும்பும் பெண், குடும்பத் தேவைகளுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு தன் பெயரையே மறந்துவிட்ட பெண் போன்ற கதாபாத்திரங்களை இக்கதைகளின் மூலமாக அறிய முடிகிறது. கணவன் மனைவி இருவருக்கிடையே உருவாகும் கருத்து முரண்களைப் பாரம்பரியம், அறியாமை, அசட்டுத்தனம், துணிச்சல், நம்பிக்கை, பொறுமை, விவேகம் ஆகியவற்றால் பெண்கள் எதிர்கொள்வதை, அதிலிருந்து மீண்டு வாழும் வாழ்வை இக்கதைகள் பேசுகின்றன. பெண்கள் தங்களுடைய இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள முனையும் தருணங்கள் பிரச்சாரம் ஆகாமல் கலைத்தன்மையோடு வெளிப்பட்டிருப்பது இக்கதைகளின் சிறப்பாகும்.




## ஓடும் ரயிலில் பாய்ந்து ஏறுவது எப்படி?

*(தேர்ந்தெடுத்த கதைகள்)*

**மதுபால்**

மலையாளத்திலிருந்து தமிழில்: **நிர்மால்யா**

ரூ. 220

கார் திருடன், உதவி இயக்குநர், பகல் குடிகாரன், ஏமாற்றுக்காரன், கன்னியாஸ்திரீ, பாலியல் தொழிலாளி, மண உறவுக்கு வெளியில் அமைந்த காதலன் ஆகியோரைக்கொண்டது மதுபாலின் கதையுலகம். இவ்வுலகின் நம்பகத்தன்மையும் கேலியும் விசாரணையும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் உற்று நோக்கச் செய்கின்றன. வித்தியாசமான குணாம்சங்களைக் கொண்ட மனிதர்களும் பின்புலமும்கொண்ட கதைகள் இவை. ரயில் பயணங்களும் சினிமா படப்பிடிப்பு நடக்கும் இடங்களும் தங்கும் விடுதிகளும் இக்கதைகளின் நிகழ்களங்கள். யதார்த்த உலகின் மயக்க நிலைகளைக் கொண்டிருப்பது மதுபால் கதைகள்மீது ஈர்ப்பு ஏற்படக் காரணமாகிறது.

**சி | று | க | தை | க | ள்**




## பெரியம்மை

*(புனைகதைகள்)*

**சுரேஷ்குமார இந்திரஜித்**

ரூ. 180

இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள், நீள்கதைகள், குறுங்கதைகள் அவற்றுக்கு உகந்த கதை வடிவத்தை அடைந்துள்ளன. காட்சி விவரணைகள் கதைகளுக்கு புதிர்த்தன்மையை அளிப்பதாக மாறுகின்றன. ஒரு நீள்கதை வினோத யதார்த்தங்களால் ஆன சரித்திரக் கதை. இன்னொரு நீள்கதை தூய இலக்கியத்திற்குப் புறம்பான வகையிலும் வடிவத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. நுட்பங்கள் கொண்ட குறுங்கதைகள் கச்சிதமான வடிவத்தில் அமைந்துள்ளன. சுரேஷ்குமார இந்திரஜித்தின் புது வகைக் கதைகளைக் கொண்ட நூல் இது.




## கடவுளுக்குப் பின்

**பொன்முகலி**

ரூ. 130

இன்றைய நெருக்கடியான வாழ்வில் பெண்களின் இருப்பும் இருப்பிடமும் மாற்றமடைந்துவருவதை இக்கதைகள் சித்தரிக்கின்றன. கிராம வாழ்வு தொடங்கி, நகர்ப்புறங்களில் உள்ள பெண்களுக்கான விடுதிகள், புறநகர்ப் பகுதிகளில் தனித்த வீட்டில் கணவனின் வருகைக்காகக் காத்திருக்கும் பெண்கள் என இக்கதைகளின் களம் விரிகிறது. நகரத்தின் நவீன வாழ்வு பெண்மீது விரிக்கும் மாயவலையையும் கனவுக்கும் நிஜத்துக்கும் இடையில் பயணிக்கும் தருணங்களையும் கதையாக்குகிறார் பொன்முகலி. அன்பின் போதாமைகளை, நியாயங்களை, துயரங்களை, கோபங்களை தாய்மகள், தந்தை மகள் உறவுகள் வழியாகப் பேசும் கதைகள் இவை. பாதுகாப்பான உடலுறவை வைத்துக்கொள்ளும்படி தன் பெண்ணுக்குச் சிபாரிசு செய்யும் தாய், மணமின்றி வாழ விரும்பும் பெண், உறவுச் சிக்கல் உளவியல் சிக்கலாகி அலைக்கழிக்கப்படும் பெண் எனப் பல விதமானவர்களைப் பொன்முகலியின் கதையுலகில் காண முடிகிறது. இது இவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பு.




## வேல்!

**பெருமாள்முருகன்**

ரூ. 230

வளர்ப்பு விலங்குகள் இந்திய வீடுகளுக்குள் நுழைந்ததும் குடும்ப உறவுகளில் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அவற்றைப் பருண்மையாகவும் நுட்பமாகவும் புரிந்துகொள்ள முடிகிறது. வளர்ப்பு விலங்குகளால் குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள், மாற்றங்கள் குறித்து எழுத எவ்வளவோ உள்ளன. இத்தொகுப்பு மூலமாகச் சில கதைகளை உங்கள் முன் வைக்கிறேன். பூனைகளுக்கும் நாய்களுக்கும் மனிதக் குணங்கள் ஏறுவதை அல்லது ஏற்றுவதை நகைச்சுவையாகச் சில கதைகளிலும் காத்திரமாகச் சில கதைகளிலும் எழுதியிருக்கிறேன். மனித உறவுகள் நிழலாகி மனித வளர்ப்பு விலங்கு உறவு பெரிதாகி வரும் சித்திரத்தை இக்கதைகள் கொண்டிருக்கின்றன. இக்கதைத் தொகுப்பு என் எழுத்துக்களில் மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**பெருமாள்முருகன்**





## சற்றே பெரிய கதைகளின் புத்தகம்

**றஷ்மி**

ரூ. 270

துரோகமும் ஆற்றாமையும் வஞ்சினமும் நிராதரவும், தோல்வியும் நிராசையும் பெண்ணாகத் திரண்டு ஆணின் முன் நின்று உரையாடும் வலி மிகுந்த புனைவை உருவாக்குகின்றன றஷ்மியின் கதைகள். பழகிய கதைக்களன்களில் புதிய தோற்றத்துடன் வெளிப்படும் கதைகள் இவை. அவரவர்க்கு அவரவர் இலக்குகளைக் குறித்துக் கொடுத்தது வாழ்வு என்று தத்துவார்த்தமாக எழுதும் ஓவியர் றஷ்மி தன்னுடைய கதைகளில் காமத்தைப் பல்வேறு முகங்களாகத் தீட்டிக் காட்டுகிறார். மெதுவாக நகரும் காட்சிகளில் கலந்து சிறப்பிக்கும் பின்னணி ஒலியைப் போல இக்கதைகளில் உரையாடல்கள் அமைந்திருக்கின்றன. இது றஷ்மியின் முதல் சிறுகதைத் தொகுப்பு.



## நீல மிடறு

**லாவண்யா சுந்தரராஜன்**

ரூ. 180

இலக்கியத்தில் முதலும் முடிவுமான கச்சாப்பொருளும் அதனை வனைந்து வார்த்தெடுக்கும் களமும் மனித மனம்தான். அதன் ஆழத்துப் புதிர்களும் அவிழ்க்கவொண்ணா முடிச்சுகளும் அடங்கியிருக்கும் இருள்வெளியினின்றும் துளியேனும் தொட்டெடுத்து துலக்கிக் காட்டுவதில்தான் படைப்பின் பெறுமதி அடங்கியுள்ளது. அவ்வகையில் லாவண்யாவின் இத்தொகுப்பிலுள்ள கதைகள் பல்வேறு நிலைகளில் மனிதர்கள் உணரும் தனிமையை, உறவிற்காக அவர்கள் கொள்ளும் தவிப்பை, புறக்கணிப்பின் போதான ஆற்றாமையை, அரவணைப்பில் கிடைக்கும் ஆறுதலை, இழந்த காதலை, இருப்பின் கையறுநிலையை எனப் பல தருணங்களை ஆரவாரம் அதிகமில்லாத மொழியில் அடங்கிய தொனியில் முன்வைக்கின்றன. மேலெழுந்த பார்வைக்கு சலனமற்று நகர்வதுபோல் தோற்றம் காட்டினும் ஆழத்தில் சில உள்ளோட்டங்கள் கொண்ட நதியைப்போல வாசிப்பின் போக்கில் நம்மை மெல்ல உள்ளிழுத்துக்கொள்கின்றன இக்கதைகள்.




## நஞ்சுக் கொடி

**பாலகுமார் விஜயராமன்**

ரூ. 170

சமகால நடுத்தர வர்க்கத்தினரின் மண வாழ்க்கையில் உருவாகும் உறவுச் சிக்கல்களைப் பற்றியவையாக இக்கதைகள் அமைந்திருக்கின்றன. அன்பும் அறனும் கலந்திருக்க வேண்டும் எனக் கருதப்படும் இல்லற வாழ்க்கையில் நஞ்சுக் கொடி சுற்றிய துயரங்கள் பால்நெறிக்கட்டியாகி வலி தருவதை யதார்த்தமாகச் சித்திரிக்கிறார் பாலகுமார் விஜயராமன். குழந்தைப்பேறும் குழந்தையின்மையும் உதிரும் இலையாகவும் துளிர்விடும் தளிராகவும் இக்கதைகளில் மாறிமாறிக் காட்சி தருகின்றன. தங்களுக்கான வாழ்க்கையை வேறு யாரோ வாழ்கிற வேதனையை ஏக்கத்துடன் நினைத்துக்கொள்ளும் கதாபாத்திரங்கள் வருகிறார்கள். பறவைகளின் அலைவுறுதலும் அவற்றின் இருப்பிடமும் இக்கதைகளில் படிமமாக உருப்பெறுகின்றன. உறவுகளுக்கிடையிலான மனம் திறந்த உரையாடல்கள் கடும் வலியினூடே மின்னும் நம்பிக்கைக் கீற்றாக அமைவதையும் இக்கதைகள் அடையாளம் காண்கின்றன. பாலகுமார் விஜயராமின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இது.





## வெல்கம் டு மெல்லெனியம்

**அரவிந்தன்**

ரூ. 180

அரவிந்தனின் இந்தக் கதைகள் புத்தாயிரத்தின் வாழ்க்கையைப் பற்றிய நுட்பமான உளவியல் சித்தரிப்புகள். நவீன தொழில்நுட்பம் மனிதர்களின் வாழ்விலும் உறவுகளிலும் விழுமியங்களிலும் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்களைப் பற்றிய கதைகள் இவை. இன்றைய மனிதர்களின் தன்னிலை பல்வேறு தன்னிலைகளின் கூட்டுத் தொகை. அந்தத் தன்னிலைகள் அவர்களுடைய அகத்திற்குள் கச்சிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பெட்டிகளுக்குள் இவர்கள் அதிர்வின்றி நழுவிச் செல்கிறார்கள். இந்த மாற்றத்தை அரவிந்தன் கச்சிதமான வரிகளில் உணர்த்திச் சொல்கிறார். மிகுதியும் உளவியல் தன்மை கொண்ட இந்தக் கதைகளை உளவியல் கோட்பாடுகளின் வழியே பார்க்கையில் புதிய கோணங்கள் தோன்றினாலும், இந்தக் கோட்பாடுகளில் மதிப்போ ஆர்வமோ இல்லாதவர்களும் நெருக்கமாக உணரக்கூடிய வகையில் இந்தக் கதைகள் உள்ளன.

**மொ | ழி | பெ | ய | ர் | ப் | பு | க் | க | ட் | டு | ரை | க | ள்**




## ஏழு போராளிகள்!

### இந்திய விடுதலைப் போரில் தோள்கொடுத்த மேற்கத்தியர்கள்


**ராமச்சந்திர குஹா**

தமிழில்: **சு. தியடோர் பாஸ்கரன்**

ரூ. 690

உலகின் தலை சிறந்த வரலாற்றாசிரியர்களில் ஒருவரான ராமச்சந்திர குஹா கூறும் இக்கதைகள், இந்திய சுதந்திரப் போராட்டத்தை பற்றிய பல புதிய புரிதல்களை நமக்குத் தருகின்றன. பிரமிக்கவைக்கும் இந்தப் பதிவுகள் பல இடங்களில் நெகிழவும் வைக்கின்றன. இந்தியாவைத் தமது சொந்த நாடாக வரித்துக்கொண்ட இந்த ஆளுமைகளோடும் அவர்களின் வாழ்வோடும் நாம் நெருக்கம் கொள்ளும் வகையில் தியடோர் பாஸ்கரன் இதைத் தமிழில் தந்திருக்கிறார்.

**க | ட் | டு | ரை | க | ள்**





## அயோத்திதாசர்: சிந்தை முறை

**ஸ்டாலின் ராஜாங்கம்**

ரூ. 230

அயோத்திதாசரின் சிந்தனை புள்ளிகளை கண்டறிந்து அவற்றை ஒரு பார்வை கோணமாக வளர்த்தெடுப்பதை இந்நூல் மையமாகக் கொண்டிருக்கிறது. அந்த கோணத்தின் அடிப்படையில் சமூகத்தின் வெவ்வேறு தருணங்களை வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் விமர்சிக்கவும் முடியும் என்பது இந்நூலின் வாதம்.மொத்தத்தில் அயோத்திதாசரின் ஆளுமையை அவருடைய சிந்தனையின் வழியாக இந்நூல் கட்டமைக்கிறது.




## மூன்றாவது கண்

### (மொழிபெயர்ப்பின் சிக்கல்கள், நுட்பங்கள், அரசியல் குறித்த பார்வைகள்)

**ஜி. குப்புசாமி**

ரூ. 220

மொழிபெயர்ப்பில் பல கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் உள்ளன. கோட்பாட்டுப் புரிதலோ பிரக்ஞைபூர்வமான அணுகுமுறையோ இல்லாமல் இரு மொழியறிவே போதும் என்னும் நம்பிக்கையுடன் மொழியாக்கங்கள் உற்பத்தியாகும் களம் தமிழிலக்கியச் சூழல். இந்தப் பின்புலத்தில்தான் ஜி. குப்புசாமி போன்ற விழிப்புணர்வுடைய அரிய மொழிபெயர்ப்பாளர்கள் இயங்குகிறார்கள். மொழியாக்கப் பணிக்காகவே தன் வாழ்நாளின் பெரும்பகுதியை அர்ப்பணித்துவரும் குப்புசாமி மொழியாக்கம் தொடர்பான தன் கருத்துக்களையும் கற்றலையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்கிறார். மொழியாக்கம் குறித்த நேரடி அனுபவத்தின் அடிப்படையிலான நூல் இதைப்போல வேறொன்று இதுவரை தமிழில் வந்ததில்லை. மொழியாக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் ஆர்வம் கொண்டவர்களும் பொதுவாக மொழியில் பற்றுதல் கொண்டவர்களும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது.




## உற்ற சொல்லைத் தேடி

மு. குலசேகரன்

ரூ. 220

கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் ஆளுமைகள் பற்றி விரிவாகப் பேசுகின்றன மு. குலசேகரனின் இக்கட்டுரைகள். படைப்பு நுட்பங்களையும் ஆளுமைகளின் சித்திரங்களையும் தெளிவாக முன்வைக்கிறார் நூலாசிரியர். படைப்பாளியின் நிறை, குறைகளைத் தீர்க்கமாகவும் தர்க்க ரீதியாகவும் எடுத்துரைக்கிறார். இவர் தேர்ந்தெடுத்த நூல்கள் அவருடைய ரசனையை எடுத்துக்காட்டுகின்றன. அவை அந்தந்த ஆசிரியர்களின் சிறந்த படைப்பாகவும் அமைந்திருப்பது தற்செயலானதல்ல. புனைகதை எழுத்தாளர் கவிதையின் மேல் கொண்டுள்ள ஈடுபாட்டையும் புனைகதையாளர் கவிதையைப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் முன்வைத்திருப்பது இத்தொகுப்பின் சிறப்பு.




## திரைக்குப் பின்

திரைப்படங்கள் திரை ஆளுமைகள் குறித்த பார்வைகள்

அசோகமித்திரன்

ரூ. 390

தமிழின் தீவிர எழுத்தாளர்கள் வெகுசனத் திரைப்படங்களை புறக்கணித்த காலத்திலேயே அவற்றைப் பொருட்படுத்தி எழுதியவர் அசோகமித்திரன். ஜெமினி ஸ்டுடியோவில் பதினேழு ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். திரைப்படம் தயாரிப்பை அறிந்தவர். உலக சினிமாவைப் பார்த்தவர். திரைப்பட விழாக்களுக்குச் சென்றவர். தணிக்கைக் குழு உறுப்பினராக இருந்தவர். இவை அனைத்தும் அவருடைய படைப்பூக்கத்தோடு இணைந்து இக்கட்டுரைகளில் வெளிப்படுகின்றன. திரைப்படங்கள், திரைப்பட ஆளுமைகள், திரைப்பட விழாக்கள் என பல்வேறு அம்சங்களைப் பற்றியும் அசோகமித்திரனின் பார்வைகளை இந்த நூலில் காணலாம்.




## நிலவைச் சுட்டும் விரல்

யுவன் சந்திரசேகர்

ரூ. 270

இக்கட்டுரைகள். முழுக்க முழுக்க ரசனை சார்ந்தவை. அனுபவம் சார்ந்தவை. ரசிக்கும் மனத்தின் பறத்தலுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டவை. கவிதையை வாசிக்கும்போதோ, வாசித்த கவிதைகளைப் பற்றி யோசிக்கும்போதோ, நினைவுக்கு வந்த அனைத்தையும் ஏதோ ஒரு விதத்தில் கோத்துத் தருபவை. அனைத்துக் கட்டுரைகளுமே கவிதை பற்றிப் பேசுபவை; கவிதையியல் பற்றியவை அல்ல. எனக்கு நானே பேசிக்கொண்டதைக் கோத்து வைத்திருக்கிறேன். மற்றபடி, கவிதையுடனான சகவாசம், எந்த அளவிலுமே கிளர்ச்சி தரக்கூடியது. காலச்சுவடு இதழில் தொடர் பத்தியாக வெளியான கட்டுரைகளுடன் புதிதாக எழுதப்பட்டவையும் சேர்ந்தது இந்தத் தொகுப்பு.

- எம். யுவன்சந்திரசேகர்

**க | வி | தை | க | ள்**




## இதுவும்தான் அதுவும்தான்

எம். யுவன்

ரூ. 150

ஆரம்பநாளிலிருந்து எழுதிய கவிதைகளின் முழுத் தொகுப்பு 'தீராப்பகல்' 2016இல் வெளிவந்தது. ஏழு வருடங்களுக்குப் பிறகு இந்தத் தொகுப்பு. முன்னொரு முறை, புனைகதை பகற்கனவு என்றும், கவிதையைக் கனவு என்றும் ஒப்பிட்டு எழுதினேன். உறக்கத்தின் மடியில் தன்னிலையை முழுக்க உதிர்த்த பிறகு நிகழ்கிற கனவே கவிதை. நிகழும்போதே பதிவு செய்யப்பட்ட கனவு. உருவமும் உள்ளடக்கமும் தனித்தனியாகத் தெரியக்கூடாத மாயவடிவம். கவிஞனின் சாதாரண அனுபவத்தைவிட, சாதாரணனின் கவிதானுபவம் பொருட்படுத்தத்தக்கது இந்தக் கவிதைகளில் அதை நிகழ்த்திப் பார்க்கவே முயன்றிருக்கிறேன்.

- எம். யுவன்




## இல்லாத இன்னொரு பயணம்


ந. ஜயபாஸ்கரன்

ரூ. 100

இத்தொகுப்பிலுள்ள ஒருபகுதிக் கவிதைகள், நிகழ்காலத்தில் மறைந்திருக்கும் கடந்த காலத்தின் இருப்பை நினைவேக்கமற்றுச் சுட்டிக்காட்டுபவையாக இருக்கின்றன. மறுபகுதிக் கவிதைகள், 'இல்லாத இன்னொரு பயணத்திற்கான' தயாரிப்புக் குறிப்புகளாகவும் இரங்கற்பாடலின் மூட்டமுள்ளதாகவும் சுதந்திரமான ஹைக்கூவின் அம்சமுள்ளவையாகவும் உள்ளன.

இக்கவிதைகள், ஆழ்ந்த மௌனத்தைத் தமக்குள் கடத்திக்கொள்வது மட்டுமின்றி வாசகரிடமும் அதைக் கடத்துகின்றன. ஆசுவாசத்திற்கு எந்த உத்தரவாதமும் அளிக்காமல் வேறொரு கதியில் நிதானிக்க வைக்கும் கவிதைகள் இவை.

**வே.நி. சூர்யா**




## காஞ்சி

சேரன்

ரூ. 250

ஈழ இனவழிப்பின் பின் சேரன் எழுதிய கவிதைத் தொகை வரிசையில் முதலாவது காடாற்று (2011). பின்பு அஞர் (2018), திணைமயக்கம் ( 2019) என்பன வெளியாகின. இப்பொழுது காஞ்சி.

அதிர்ச்சியூட்டக்கூடிய படிமங்களின் அடித்தளத்திலிருந்து எழுகின்றன சேரனின் கவிதைகள். அனேகமாக, எல்லாக் கவிதைகளுக்குள்ளும் நம்மை உறைவிலாழ்த்திவிடக்கூடிய வரிகள் திடீரென்று எதிர்ப்பட்டு நம்மை அங்கிருந்து நகரவிடாமல் செய்கின்றன. வேறு வேறு உலகங்களை நோக்கி விரிகின்ற சேரனுக்கு, ஒரு நொடி வாழ்வுக்கும் மறு நொடி சாவுக்குமான இரண்டு நொடிகளுக்கு இடையில் தோன்றலும், தோன்றிப் பின் மறைவும், அழிவும் ஆக்கமும், போரும், பின்னும் போரும், உறவும் பிரிவும், களவும் காதலும், காமமும் ஊடலுமாய் எல்லாமே கவிதைகள். இவை சேரனின் தீர்க்கமான குரல்கள். முகத்தில் அறையுமாப்போல் இந்த உலகத்திற்கு முன் அவர் நிறைவேற்றும் பிரகடனங்கள். பாடித் தீராதது வாழ்வு...

**றஷ்மி**





## தொலையா வட்டம்

ராஜன் ஆத்தியப்பன்

ரூ. 145

2016க்குப் பிறகு ராஜன் ஆத்தியப்பன் எழுதிய கவிதைகளின் தொகுப்பு இந்நூல்.

கவிதை எனும் காட்டு விலங்கிடம் தன்னை ஒப்புக்கொடுக்க விரும்பும் இவருடைய கவிதைகள் மொழியாலும் வடிவத்தாலும் கூர்மையான ஆயுதமாகின்றன. சவரக் கடையின் இருக்கையில் சிந்திய மயிர்க்கொத்து காலத்தின் வரிவடிவமாகிறது. செம்பழுத்த பரிதி சேவலின் வாயில் வட்டம் வரைகிறது. உளிக்குழிகளின் நேற்றைய பாசி வழுவழுப்பாக நினைவுகள் எஞ்சுகின்றன. பிராணிகளும் பறவைகளும் தெய்வங்களின் சொற்களாய் அலைந்து இறுதியில் கவிதையாகின்றன. இது இவருடைய மூன்றாவது கவிதைத் தொகுப்பு.




## வானம் கீழிறங்கும்போது (1976 - 2023)


ஆனந்த்

ரூ. 450

தத்துவ விசாரம் கொண்டவை; ஆன்மீகமானவை என்று ஆனந்தின் கவிதைகளைக் காண விரும்புகிறேன். ஆனால் தத்துவம், ஆன்மீகம் ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்டிருக்கும் மரபான பொருளில் அல்ல. அதற்கு மாறான நவீன வாழ்க்கை சார்ந்த பொருளில். தத்துவம் என்பது அனுபவத்தை விளக்குவதாகவும் ஆன்மீகம் என்பது இறைமையை அடைவதாகவும் காலங்காலமாகப் பயின்று வருகின்றன. நவீனகாலம் தத்துவத்தை மானுட இருப்பின் தேடலாகவும் ஆன்மீகத்தை இம்மையியல் சார்ந்ததாகவும் புதிய பொருளில் காண்கிறது. இந்த இயல்பின் சான்று ஆனந்தின் கவிதைகள்.

- சுகுமாரன்

**கி | ளா | சி | க் | த | ன் | வ | ர | லா | று**




## கவலை


அழகிய நாயகி அம்மாள்

ரூ. 590

இது ஒரு பெண்ணின் கதை. பெண்களின் வாழ்க்கை குடும்பத்தோடு இறுக்கமாக முடிச்சுப் போட்டு வைத்திருப்பதால் இது ஒரு குடும்பத்தின் கதையாகவும் அமைகிறது. தன்வரலாறு, பெண்ணை மையமாகக் கொண்ட குடும்ப வரலாறு என்றும் இதைக் கருதலாம். எழுத்தாளர் பொன்னீலனுக்கும் அவரது தாயார் அழகிய நாயகி அம்மாளுக்கும் இடையே ஒருநாள் நடந்த உரையாடல்தான் இந்த நூலின் வித்து. பொன்னீலன் தந்த கதைப் புத்தகத்தைப் படிக்கும் அவரது அன்னை “எங் கதையை இந்தக் கதையைவிட எத்தனையோ மடங்கு பெரிதா எழுதலாமே” என்று சொல்கிறார். அதைக் கேட்ட பொன்னீலன் தன்னுடைய கதையை எழுதும்படி அம்மாவைத் தூண்டுகிறார். அதன் விளைவே இந்த அரிய பதிவு.

நாவலைப் போன்ற விறுவிறுப்பும் பன்முகப் பரிமாணங்களும் கொண்ட இந்த நூல் ஒரு காலகட்டத்தின், ஒரு நிலப்பரப்பின், ஒரு பண்பாட்டின், ஒரு மக்கள் கூட்டத்தின் கதைகளைச் சொல்கிறது. பண்பாட்டு அசைவுகளிலும் திசையறியாத வாழ்க்கைப் பயணங்களிலும் ஆர்வம் கொண்டவர்கள் தவறவிடக் கூடாத படைப்பு இது.

**த | ன் | வ | ர | லா | று**



## பரத்தை தொழிலில் ஒரு படித்த பெண்

காமமும் சுரண்டலும் வஞ்சகமும் நிறைந்த நினைவுகள்

மானதா தேவி

தமிழில்: **சசிகலா பாபு** ரூ. 190

இருபதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் வங்காளத்தின் பணக்கார உயர்சாதிக் குடும்பத்தைச் சேர்ந்த படித்த பதின்பருவத்துப் பெண் மானதா தேவி. தாயை இழந்து தந்தையின் அன்பும் கிடைக்காத அவரை உறவுக்கார இளைஞன் ஒருவன் தன் மாயவலையில் வீழ்த்தி, வீட்டிலிருந்து கூட்டிக் கொண்டு போய் பல இடங்களிலும் சுற்றித் திரிந்த பின்னர், இறுதியில் பிருந்தாவனத்தில் விட்டுவிடுகிறான். சூழலும் இளம்வயதும் அவரை வழிதவற வைக்கின்றன. கல்கத்தாவுக்கு வந்து பாலியல் தொழிலில் இறங்குகிறார். சமூகத்தின் உயர்ந்த மனிதர்கள், வணிகர்கள், தேசபக்தர்கள், சீர்திருத்தவாதிகள், பண்டிதர்கள் என அனைவரையும் தனது வாடிக்கையாளர்களாகச் சந்திக்கிறார். பெயர்களைச் சொல்லாமல், அவர்களின் இரட்டை வேடங்களை விமர்சிக்கிறார்.

**வ | ர | லா | று**




## இந்தியாவின் சுருக்கமான வரலாறு


ஜான் ஜுபர்ஸிக்கி

தமிழில்: D.I. **அரவிந்தன்**

(விலையடக்கப் பதிப்பு) ரூ. 190

5,000 ஆண்டுகால இந்திய வரலாறு – மிகச் சுருக்கமான வடிவில். ஒரே மூச்சில் படிக்கக்கூடிய வகையில் விறுவிறுப்பான நடையும் சுவாரஸ்யமான எடுத்துரைப்பும் கொண்ட நூல் இது. பண்டைய நாகரிகங்களின் இடிபாடுகளிலிருந்து உலகின் முக்கியமான சக்திகளில் ஒன்றாக விளங்கும் இன்றைய கட்டம்வரையிலான இந்தியாவின் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லும் நூல். அசோகர், சந்திரகுப்தர், சாணக்கியர், ராஜராஜ சோழன், அக்பர், ராபர்ட் கிளைவ், மகாத்மா காந்தி, முகம்மது அலி ஜின்னா, ஜவஹர்லால் நேரு, நரேந்திர மோடி எனப் பல்வேறு ஆளுமைகளைப் பற்றிய சித்திரங்களும் இதில் உள்ளன. தமிழக அரசர்கள் பற்றியும் இந்தியாவின் பக்தி இயக்கத்திற்குத் தமிழகம் அளித்த கொடை பற்றியும் இந்த நூல் விவரிக்கிறது.

**ஆ | ய் | வு**




## பாரதியும் உ.வே.சா.வும்

ய. மணிகண்டன்

ரூ. 190

இருபதாம் நூற்றாண்டின் இருபெரும் தமிழாளுமைகள் பாரதியும் உ.வே.சா.வும். பண்டைத் தமிழின் குறியீடு உ.வே. சா. புதுமைத் தமிழின் உருவம் பாரதியார். இருவரும் சமகாலத்தவர். நேரடியாகப் பழகியவர்கள். தமிழரசர் என உ.வே.சா.வைத் தொடக்கத்திலேயே கொண்டாடிய கவியரசர் பாரதி. பாரதியின் பேராளுமை வெளிப்படாத பருவத்திலேயே பாரதியை அரவணைத்ததோடு மறைவுக்குப் பிந்தைய காலத்திலும் பாரதியின் இடத்தை எழுத்தாலும் சொல்லாலும் அங்கீகரித்தவர் உ.வே.சா. பல சர்ச்சைகளும் விவாதங்களும் எழுப்பப்பெறும் பாரதி உ.வே. சா. தொடர்பு வரலாற்றை முதன்முதலாகக் கண்டுபிடித்த புதிய ஆவணங்களின், முதல்நிலை ஆதாரங்களின் துணைகொண்டு ஆராய்ந்து உண்மைகளைத் தெளிவுபடுத்தித் துலக்கிக் காட்டுகிறது இந்நூல்.

## நா | ட | க | ம்




### யயாதி

**கிரீஷ் கார்னாட்**

தமிழில்: **பாவண்ணன்**

ரூ. 170

தன்னுடைய மகிழ்ச்சி, தன்னுடைய உலகம், தன்னுடைய பெருமை, தன்னுடைய எதிர்காலம் என எப்போதும் தன்னை மையமாகக் கொண்டு மட்டுமே சிந்தித்துச் செயல்படுகிற தற்காலச் சமூக மாந்தனின் உருவகமாகத் திரண்டு நிற்கிறான் யயாதி. எல்லையற்ற அவனுடைய பேராசை அவனை ஆட்டிப் படைத்தபடியே இருக்கிறது. ஒவ்வொரு கணமும் தன் விழைவை மட்டுமே அவன் கருத்தில் கொள்கிறான். வேறு எதையுமே அவன் பொருட்படுத்தவில்லை. ஏறிட்டுப் பார்க்கவும் அவன் விரும்பவில்லை. விஸ்வரூபம் கொண்ட அவனுடைய விழைவு ஒருநாளும் திரும்பப் பெற முடியாத ஓர் உயிரைப் பலி வாங்கிய பிறகே அடங்கி ஓய்கிறது. துயர் பொருந்திய அக்கணத்தில்தான் யயாதியுடைய அறிவுக் கண்கள் திறக்கின்றன. அடங்காத விழைவுக்கும் அறிவுக்கும் இடையிலான இணைப்புகளிலும் முரண்களிலும் பேருருக் கொண்டு நிற்கிறான் யயாதி.

## அ | னு | ப | வ | ப் | ப | தி | வு




### பின்னகர்ந்த காலம்

*(அனுபவப் பதிவுகளின் முழுத்தொகுப்பு)*

**வண்ணநிலவன்**

ரூ. 450

வண்ணநிலவனின் வாழ்க்கை அனுபவங்களின் பதிவு இது. பள்ளி, கல்லூரி காலத்திலிருந்து தொடங்கி, அச்சகம், இதழியல் சினிமா ஆகிய துறைகளில் பணிபுரிந்த அனுபவங்களையும் எழுத்து, இசை, நாடகம், ஓவியம் சார்ந்த அனுபவங்களையும் பதிவு செய்திருக்கிறார். கிட்டத்தட்ட 50 ஆண்டுக் காலம் திருநெல்வேலி, சென்னை, மதுரை முதலான நகரங்களில் வாழ்ந்த அனுபவங்களையும் தான் சந்தித்த ஆளுமைகளுடனான அனுபவங்களையும் வண்ணநிலவன் பகிர்ந்துகொள்கிறார். இந்த நூல் வண்ணநிலவனின் சுயசரிதையாகவும் அவர் வாழ்ந்த காலத்தின் ஆவணமாகவும் இலக்கிய வரலாறாகவும் ஒருசேர அமைந்துள்ளது. வண்ணநிலவனின் வாழ்க்கைப் போராட்டத்தின் வெற்றியையும் வேதனையையும் ஏமாற்றத்தையும் அவமானங்களையும் வாசகர் உணரச் செய்யும் பகிர்வு இது.




### தென்னம்படல் மறைப்பு


அழியாத நினைவின் தடங்கள்

நபீல்

ரூ. 350

நினைவிலிருந்து அகல மறுக்கும் பால்யமும் அது தரும் அனுபவ விரிவும் ஒட்டுமொத்த வாழ்வையும் தீர்மானித்துவிடுகின்றன. வாழ்வு ஊதித்தள்ளிக் கரைத்துவிட்ட காட்சிகளையும் அனுபவங்களையும் ஒரு சிறுவனின் கண்ணோட்டத்தில் மீட்டிக்கொள்கிற வாய்ப்பை இப்பிரதி உருவாக்கித் தருகிறது. அனுபவங்களை நறுக்குத் தெறித்தாற்போன்ற வாக்கியங்களுக்குள் பிசிறின்றி எழுதிச் செல்கிறார் ஆசிரியர். அந்தக் காலம் பற்றிய விதந்தோதலையும் நினைவேக்கத்தையும் பெருமிதத்தையும் கூருணர்வுடன் தவிர்த்திருக்கிறார்.

## நே | ர் | கா | ண | ல்




### சக கவிஞர்

கவிதையியல் குறித்த நேர்காணல்கள்

மௌனன் யாத்ரிகா

ரூ. 200

சமகாலக் கவிதை கவிதையியல் குறித்துக் கவிஞர்களின் கருத்துத் தொகுப்பு இந்த நூல். கவிதைகள் கவிதையியல் குறித்து, கோட்பாட்டாளர்களும் விமர்சகர்களும் பேசிக்கொண்டிருந்த இடத்திலிருந்து நகர்ந்து, கவிஞர்களை பேசவைத்ததுதான் இந்த உரையாடல்களின் முக்கியத்துவம். கவிஞர் மவுனன் யாத்ரீகன் கவிஞர்களிடம் கேள்விகளை அனுப்பி அவர்களுடைய பதில்களைப் பெற்று அவற்றை நூலாகத் தொகுத்துள்ளார். தன்னுடைய படைப்பு, வாசிப்புச் செயல்பாடு, தன்னுடைய கவிதை உலகு ஆகியவை குறித்து கவிஞர்கள் சொன்னவை முகநூலில் வெளியானபோது பரவலான கவனத்தைப் பெற்றன. விவாதங்களும் நடந்தன. சமகாலத் தமிழ்க் கவிதை குறித்து நடந்த மிக விரிவான உரையாடலாக அமைந்துள்ள இந்த நூல், சமகாலக் கவிதை, கவிஞர்கள், கவிதையியல் ஆகியவை குறித்த ஆவணமாக விளங்கக்கூடியது.





### முற்றுப்பெறாத விவாதங்கள்

**எம்.ஏ. நுஃமான்**

ரூ. 250

எம்.ஏ. நுஃமானின் அக்கறைகளையும் அவதானிப்புகளையும் தரிசனங்களையும் காட்டுகிறது இந்நேர்காணல் தொகுப்பு. மார்க்சியம், மொழியியல், சமூகம், இலக்கியம், இனத்துவம், தேசியவாதம் என இதன் பரப்பு விரிவானது. இந்த விரிந்த பரப்பு இலங்கை அரசியதுலின் ஒரு காலகட்டத்தை மறுவாசிப்புக்கு உள்ளாக்குகிறது. கூடவே இலக்கியமும் சமூகமும் ஒன்றிணைகிற புள்ளிகளையும் சுட்டிக்காட்டுகிறது. இலக்கியவாதியாகவும் மொழியியலாளராகவும் விமர்சகராகவும் சமூக அக்கறை கொண்டவராகவும் நுஃமான் என்கிற ஆளுமையின் உருவாக்கத்தை விளங்கிக்கொள்வதற்கான திறப்புகளை இந்நேர்காணல் சித்திரங்கள் அளிக்கின்றன. 14 நேர்காணல்களைக்கொண்ட இத்தொகுப்பிலிருந்து தமிழின் பல்துறை ஆளுமை ஒருவரின் விரிந்த வரைபடத்தைக் கண்டடைய முடியும்.

## ப | ய | ண | நூ | ல்




### அடுத்த வீடு ஐம்பது மைல்

(ஆஸ்திரேலியப் பயணக் கட்டுரை)


**தி. ஜானகிராமன்**

ரூ. 100

பயணக் கதை என்ற வகைமையில் தி. ஜானகிராமனின் மூன்றாவது நூல் ‘அடுத்த வீடு ஐம்பது மைல்’. ஆஸ்திரேலிய அனுபவங்களின் பதிவு இந்த நூல். கல்வி ஒலிபரப்பு தொடர்பாக ஆஸ்திரேலியாவுக்கு அலுவலகப் பயணம் மேற்கொள்ளும் தி. ஜானகிராமன் இந்த நூலில் முதன்மையாக விவாதிப்பது சிறார்களின் கல்விப் பயிற்சியையும் அதன் மேம்பாட்டையும். இந்த நோக்கத்தைக் கடந்து ஆஸ்திரேலிய பயணத்தின் வரலாற்றையும் புவியியலையும் மனித வாழ்க்கையையும் ஒளிரும் சான்றுகளுடன் முன்வைக்கிறார். எங்கேயும் மனிதர்கள் ஒரே போன்றவர்கள் என்று தமது அனுபவங்களின் மூலம் தி.ஜா. உணர்கிறார். நமக்கும் உணர்த்துகிறார்.

**சுகுமாரன்**

## மொ | ழி | யி | ய | ல்




### தமிழ் மொழியின் வரலாற்றுப் பயணம்

சங்கம்முதல் இன்றுவரை

**வாசு அரங்கநாதன்**

ரூ. 200

வரலாற்றில் தமிழ்மொழி அடைந்து வந்துள்ள மாற்றங்களையும் அதன் வளர்ச்சிப்போக்கையும் தகுந்த ஆதாரங்களுடன் தெளிவாக, எளிமையாக இந்நூல் விளக்குகிறது. உலகமொழிகளின் தற்கால போக்குகளின் அடிப்படையில் ஆராய்ந்து விவரிப்பது இதன் சிறப்பு. சமகாலத்தில் பயன்பாட்டிலுள்ள வட்டார மொழி, பேச்சுமொழி ஆகியவற்றின் மூலச்சொற்களை இலக்கணரீதியாகவும் வரலாற்றுரீதியாகவும் மூலச் சொற்களின் ஆதாரங்களுடனும் விவரிக்கிறது இந்நூல். ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கல்வித்துறையினர் உள்ளிட்ட பலருக்கும் பயனளிக்கக்கூடிய நூல் இது.

## ஆ | ன் | மீ | க | ம்




### அய்யா வைகுண்டரும் அகிலத்திரட்டும்

அ.கா. பெருமாள்

ரூ. 120

வைதீகத்திற்கும் மரபுவழிச் சடங்கு வழிபாட்டு முறைகளுக்கும் எதிராகக் குரல் எழுப்பியவர்களில் குறிப்பிடத்தகுத்தவர் அய்யா வைகுண்ட சாமிகள். சாமிகளின் பிறப்பிலிருந்து தொடங்கி ஞானம் அடைந்து வாழ்ந்த நிலை வரையிலுமான விவரங்களை சுவாரசியமான தகவல்களுடன், அந்தந்த வட்டாரப் பகுதிகளில் புழக்கத்திலுள்ள கதைப்பாடல்கள், செவிவழிச் செய்திகளின் வழியே நூலாசிரியர் தொகுத்திருக்கிறார்.

## மு | ழு | த் | தொ | கு | ப் | பு




### கு. அழகிரிசாமி கட்டுரைகள்

நவீனத் தமிழ், பழந்தமிழ்

[இரண்டு தொகுதிகள்]

பதிப்பாசிரியர்: **பழ. அதியமான்**

ரூ. 1950

...ஆகவே, எழுதுவதால் நான் மனிதனாக இருக்கவும், நான் மனிதனாக வாழவும் மனிதனாக வளரவும் முடிகிற காரணத்தால் எழுதுகிறேன். இப்பொழுது, கண்டவை, கேட்டவை, காண விரும்புபவை, கேட்க விரும்புபவை, பிறரின் சுகதுக்கங்கள், சந்தர்ப்பங்களின் விசித்திரங்கள், அகத்திலும் புறத்திலும் அவ்வப்போது கண்டறியும் உண்மைகள், பொய்கள் இப்படி எல்லாவற்றையும் பற்றி நான் எழுதி ஒவ்வொரு எழுத்தையும் ஒரு குறிப்பிட்ட முடிவோடு முடிக்கும்போது என் மனித நிலையை உயர்த்தவும், அதன் மூலம் மற்றவர்களின் மனித நிலை உயரவும் அறிந்தோ அறியாத நிலையிலோ விரும்புகிறேன். எழுத்துப் பணியின் உச்ச நிலையில், நான் மற்ற சகல உயிர் வர்க்கங்களுடனும் ஒன்று கலந்து ஐக்கியமாகிவிடுவதால், நான் எனக்குச் செய்யும் மனித சேவை, மன்னுயிர் சேவையாகவும் இருக்கிறது.

## பு | தி | ய | ப | தி | ப் | பு | க | ள்





### அம்பை கதைகள் [1972-2022]

அரை நூற்றாண்டு கதைகள்

(இரண்டு தொகுதிகள்)

ரூ. 1590

பல்வேறு கதிகளில் ஓடும் வாழ்க்கையின் லகானிட்ட தருணங்களையும் வெறும் புழுதியாகவே எஞ்சிவிடும் அனுபவங்களையும் கூறும் கதைகள் இவை. சில கதைகள் பயணங்களால் உருவானவை. சில வேறு வாழ்க்கைப் பரிமாணங்களை எட்ட முயல்பவை. எல்லாக் கதைகளும் பல நகரங்களிலும் சிற்றூர்களிலும் அமையும் வாழ்க்கையைத் தொட்டுச் செல்பவை. இந்த ஓட்டத்தில் பல்வேறு உணர்வுகளுடன் இணையும் பல பெண்கள், ஆண்கள், சிறுமிகள், சிறுவர்கள். நகர்ப்புறத்தின் குற்ற முடிச்சுகளை அவிழ்க்க முயலும் சிலர். அவரவர்களுக்கான காரணங்களுடன் வாழ்க்கையை வாழவும் முடித்துக்கொள்ளவும் தீர்மானிக்கும் நபர்கள். அவர்களிடையே கிளைக்கும் பலவகைப்பட்ட உறவுகள், அவற்றிலுள்ள காதல், காமம், நேசம், பரிவு, சினம், கொலைவெறி. எல்லாவற்றையும் பிணைத்துக் கட்டும் இசை, அடர்ந்த மரங்களும் புதிர்ப்பாதைகளும் உள்ள அடவி, பல்லுயிர்கள் வசிக்கும் கடல், புராணங்களைக் கூறும் ஆறு, பின்னணி ஒலியாய்த் தொடரும் பறவை ஒலிகள் என்று ஓடும்போதே பாதையை வகுத்துக்கொண்டு ஓடும் கதைகள் இவ்விரண்டு தொகுப்புகளிலும் உள்ளன.




### ஜி. நாகராஜன் படைப்பாக்கங்கள்

(தொ-ர்):
ராஜமார்த்தாண்டன்

ரூ. 640

நவீன தமிழிலக்கியத்தின் தனித்துவமான படைப்பாளிகளில் ஒருவர் ஜி. நாகராஜன். புதிதாக ஒன்றை எட்டிப் பிடிப்பதற்கான ஆவேசம் இவருடைய படைப்புகளின் அடிப்படையான கூறு. தமிழ்க் கதையுலகின் மையத்தில் இடம்பெறும் பாத்திரங்களை விளிம்புக்குத் தள்ளும் இவர் விளிம்புநிலையிலுள்ள மனிதர்களை இயல்பாக மையத்திற்குக் கொண்டுவருகிறார். பாலியல் தொழிலாளர்கள் முதலான விளிம்புநிலை மனிதர்களை அசலாகவும் உயிரோட்டத்துடனும் பிரதிபலிப்பதில் முன்னோடியாக விளங்குபவர் ஜி. நாகராஜன்.

ஆகிவந்த மதிப்பீடுகளையும் பார்வைகளையும் இயல்பாக மீறும் இவருடைய எழுத்து கெட்டிதட்டிப்போன நம்பிக்கைகளை இரக்கமில்லாமல் நொறுக்குகிறது. வாசித்து முடித்த பிறகும் மனதுக்குள் கேட்கும் வீணையின் ரீங்காரம்போலப் படித்து முடித்த பிறகும் மனதில் நீண்ட நேரம் அதிர்வுகளை ஏற்படுத்தும் எழுத்து இவருடையது.

# ஆல் சில்ட்ரன்ஸ் பப்ளிஷிங் (பி) லிட்.

669, கே.பி. சாலை, நாகர்கோவில் - 629001, கன்னியாகுமரி மாவட்டம், இந்தியா.

தொலைபேசி: 914652278525 மின்னஞ்சல்: *aalpublisher16@gmail.com*

## புதிய வெளியீடுகள்




### திபுலான் வாராதி

மீன்பல் சிறுவர்களுக்குக் கோமாளி சொன்ன கதைகள்

**வேலு சரவணன்**

ரூ. 250

கடகடா குடுகுடு
கடகடா குடுகுடு
அலைதாண்டி கடகடா
கடல்தாண்டி குடுகுடு
நிலந்தாண்டி கடகடா
மலைதாண்டி குடுகுடு
வான் புகுவோம் கடகடா
வான் புகுவோம் குடுகுடு
கடகடா குடுகுடு
கடகடா குடுகுடு

- மழை மந்திரம்





### இவர்களுக்கும் வாழ்க்கை உண்டு

**விசாகா ஜார்ஜ்**

தமிழில்: **தி.அ. ஸ்ரீனிவாஸன்**

ரூ. 160

ஹெச்ஐவி நோயில் தாயை இழந்து, அந்த நோயால் தானும் பாதிப்புக்குள்ளாகி எல்லோராலும் விலக்கப்படும் கிருஷ்ணன் என்ற பதிமூன்று வயதுச் சிறுவனுக்குப் பள்ளிப்படிப்பு தடைபட்டுவிடுகிறது; வாழ்க்கையே அவ்வளவுதான் என்றிருந்தவனுக்கு சினேக இல்லம் ஒரு புதிய வாசலைத் திறக்கிறது; தனக்குள் இதுவரை அவனே அறியாமலிருந்த ஒரு திறமையைக் கண்டறிகிறான். அவனைப் போன்றே ஹெச்ஐவியால் பாதிக்கப்பட்ட மேலும் பல நண்பர்கள் அவனுக்குக் கிடைக்கிறார்கள். அவனது வாழ்வில் புதிய ஒளி பிறந்த கதையைச் சொல்கிறது இந்தப் புத்தகம்.




### பயணச்சீட்டு இல்லை, பயணம் உண்டு

**சுபுஹி ஜீவானி**

தமிழில்: **தி.அ. ஸ்ரீனிவாஸன்**

ரூ. 130

நகரங்களில் நாம் காலை நேரங்களில் வண்டிகளில் கடக்கும்போது, வேலைக்கு அழைப்பவர்களை எதிர்பார்த்து ஆங்காங்கே ஆணும் பெண்ணும் கூட்டமாக நிற்பதைப் பார்த்திருப்போம். இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள், இவர்களின் அன்றாட வாழ்க்கை எப்படியிருக்கிறது, இவர்களுக்கும் கனவுகள், உணர்ச்சிகள் உண்டா என்பதையெல்லாம் யோசித்திருக்கிறோமா? இந்த மனிதர்களின் உண்மைக் கதைகளை அணுக்கமாக நின்று சொல்கிறது இந்தப் புத்தகம்.




### ஊருக்கே போகலாம் வாருங்கள்

**பிரீத்தி டேவிட்**

தமிழில்: **தி.அ. ஸ்ரீனிவாஸன்**

ரூ. 130

பழங்குடியினர் வசிக்கும் கிராமம் சித்திலிங்கி. மலைகளும் வனங்களும் நிலங்களும் இருந்தாலும், மேல்படிப்புக்கு மாணவர்களும் வேலை வாய்ப்பைத் தேடி இளைஞர்களும் ஊரை விட்டுப் போக வேண்டியிருந்தது. 'துளிர்' அமைப்பு, இப்படி ஊரைவிட்டுச் சென்ற இளையோர்களின் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டறிந்து வெளிக்கொண்டுவந்து உள்ளூரிலேயே அவர்கள் வாழ வழிசெய்கிறது. இலட்சியவாதிகள் இருவரின் சிறிய தூண்டுதல் ஒரு கிராமத்தின் முகத்தையே மாற்றிக் காட்டிய கதையைச் சொல்கிறது இந்தப் புத்தகம்.




### எதிர்நீச்சல் பழகு

**நிவேதா கணேஷ்**

தமிழில்: **தி.அ. ஸ்ரீனிவாஸன்**

ரூ. 130

ஊர்க்குளத்திலும் ஏரியிலும் நீச்சலடித்துக் கொண்டிருந்த பதிமூன்று வயது திவ்யாவுக்கு நீச்சல் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. அதில் கிடைத்த வெற்றி இன்னும் பெரிய போட்டிகளில் போட்டியிடும் சந்தர்ப்பத்தை அளிக்கிறது. தனது உடல் ஊனத்தைத் தாண்டிச் செல்லும் மனவலிமையை அவள் பெறுகிறாள். அம்பிகா என்ற சினேகிதியும் அவளுக்குக் கிடைக்கிறாள். இந்த நட்பு திவ்யாவிடம் புதிய மாற்றத்தை உருவாக்குகிறது. திவ்யா பெற்ற வெளி அனுபவங்கள் அவளை எங்கு கொண்டுசென்றன? இந்தப் புத்தகத்தைப் படியுங்கள்.




### நறுக் நந்தினி

**அபர்ணா கார்த்திகேயன்**

தமிழில்: **தி.அ. ஸ்ரீனிவாஸன்**

ரூ. 160

நந்தினி துடியான பெண். ஆனால் கல்வி, வேலை, குடும்பம் பற்றிய அவள் எதிர்காலக் கனவுகளோ ஒவ்வொன்றாகத் தகர்ந்துபோகின்றன. என்றாலும் அவள் துவண்டுபோகவில்லை. ஒவ்வொரு முறை வீழும்போதும் நம்பிக்கையோடு மீண்டெழுகிறாள். தானும் தன் குழந்தைகளும் வாழ்வதற்காக அவள் மேற்கொள்ளும் முயற்சிகள் அவளைச் சாதனையாளராக்குகின்றன. தன்னம்பிக்கை, சுயசார்பு, விடாமுயற்சி, கடமையுணர்வு இவை எல்லாம் இருக்குமானால் எந்தத் தடையையும் தாண்டிச் செல்ல முடியும் என்பதை நந்தினியின் கதை வாயிலாகச் சொல்கிறது இந்தப் புத்தகம்.

**விற்பனை உரிமை: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்**